**தலைப்பு 429 – கிராமிய வயல்கள் மற்றும் அண்மித்த குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய வயல்கள் மற்றும் அண்மித்த குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிராமிய வயல்கள் மற்றும் அண்மித்த குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 25 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்போர் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கிராமிய வயல்கள் மற்றும் அண்மித்த குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குத் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக வழங்கியிருந்த அறிவுரைகளின் படி குறியீட்டு இலக்கம் 61414 இன் படி குளங்கள் நீர்த் தேக்கங்கள், கால்வாய்கள் ஆகிய நிதியல்லாத சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2021 ஆண்டின் போது ரூபா 2,568,196,192 தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதனங்களை அறுதியாக இனங்கண்டு நிதியல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. அவற்றில் ரூபா 375,949,842 தொகை மாத்திரம் அமைச்சினால் நேரடியாக செலவிடப்பட்டு இருந்ததுடன், மீதி ஏனைய திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் கீழ் செலவிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஏற்பாடுகளை விடுவிக்கும் போது உருவாகும் சொத்துக்கள் அந்த நிறுவனத்தின் நிதியல்லாத சொத்துக்கள் என இனங்காண வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி அந்த மொத்த சொத்துக்கள் அமைச்சின் கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. | 2021 ஆண்டின் போது நீர் சௌபாக்கிய செயற்திட்டத்தின் கீழ் கிராமிய குளங்கள், அணைக்கட்டுக்கள் அபிவிருத்தி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செலவுத் தலைப்பு 429-2-3-2-2506 கீழ் ரூபா 3000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் உள்ளவாறான செலவு ரூபா 2,568,196,192 தொகையாகும். அரச கணக்குத் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருளின் படி மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் 2101-2106 வரை செலவுத் தலைப்புக்களின் செலவுகள் மாத்திரம் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டதுடன், ஏனைய மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் தனதாக்கப்பட்ட சொத்துக்கள் காணப்படின் ஆரம்ப மீதி என மூலதனப்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி 2506 செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த குளங்கள் நீர்த்தேக்கங்கள் கால்வாய்கள் ஆகிய அபிவிருத்தி செய்தல் என்பதனால் இந்த அமைச்சினால் நிதி அல்லாத | அரச கணக்குத் திணைக்களத்தினால் நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக 2017 ஜூன் 28 திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். மூலதன செலவு விடயத்தின் கீழ் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் இடையே மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏற்பாடுகள் விடுவிக்கும் போது அந்த ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் மூலம் தனதாக்கிய அல்லது அபிவிருத்தி செய்த நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக அறுதியான அறிவுரைகள் வழங்க வேண்டியதுடன் அதன் படி செயற்பட்டுள்ளது என உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மீண்டும் மீளாய்விற்கு ஆளாக்கி தேவையான கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சொத்துக்கள் என கணக்கீடு செய்தல் வழக்கமாகக் காணப்படவில்லை.<br><br>மேலும், அபிவிருத்தி செய்யப்படும் குளங்கள் அணைக்கட்டுகள் அனைத்தும் நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமானவையாக இருப்பதனால் இந்த அமைச்சின் சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு தற்போது காணப்படும் சொத்துக்களை கணக்கீடு செய்யும் நடைமுறையில் ஏற்பாடுகள் காணப்படவில்லை. | |

**1.6.2 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் இராஜாங்க அமைச்சுக்கு சொந்தமாக ரூபா 62,490,000 கிரயத்தையுடைய 4 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 27,990,000 தொகைக்கான வாகனங்கள் தொடர்பாக தகவல்கள் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள PK 7066 மற்றும் PK 7067 இலக்கங்களை கொண்ட டொயோடா ஹய்லக்ஸ் டபள் கப் வண்டிகள் இரண்டு 2021.12.22 திகதி பாதீட்டுத் திணைக்களத்தின் மூலம் லீஸிங் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதி ஏற்பாட்டுக்கான நிறுவனமாக இலங்கை வங்கி ரத்மலான கிளை செயற்படுவதுடன் முன்வரும் 5 வருடங்களுக்காக தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்யும் வரை இலங்கை வங்கியே முழுமையான உரிமையாளராக காணப்படுவதுடன் இந்த வாகனத்துக்கான காப்புறுதி அனுமதிப் பத்திரம் பெறப்பட்டதும் இலங்கை வங்கியின் உரிமையின் கீழே ஆகும். தவணைப் பணத்தை செலுத்தி பூர்த்தி செய்ய பின்னர் இந்த இரண்டு வாகனங்களின் உரிமை அமைச்சுக்கு சொந்தமாவதனால் அதன் பின்னர் ஆவணங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக போதிய தகவல்கள் வெளியிடப்பட்டதென உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இராஜாங்க அமைச்சினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கருமங்களுக்காக ரூபா 743,413,000 இற்கான கட்டுநிதித் தொகையொன்று விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் ரூபா 463,011,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் படி விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதியில் 37.7 சதவீதத் தொகை கிடைத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். | பாதீட்டுக் கட்டுப்பாடு முரண்கள் குறைவாக இருக்கக் கூடிய விதமாக எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவைப்பாடுகளை இனங்காணாமல் ஒதுக்கங்கள் மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் 15 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 81,283,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 23,547,689 தொகை எனப்படும் 39 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழ் சேமிப்பு 20 சதவீதம் முதல் 92 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | 2021 அரச செலவுகள் மீளாய்வுகள் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனம் 21/1596/304/134 இன் அறிவுரைகளின் படி சில செலவு விடயங்களில் ஏற்பாடுகளை சேமிப்பதற்காக திட்டமிடப்பட்டதுடன், பதவியணி வெற்றிடங்கள் காரணமாக ஆளுக்குரிய சம்பளங்கள் செலவு விடயங்களிலும் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களின் மேலதிக நேரம், வெளிக்கள கடமைகள் மற்றும் பயிற்சிகளில் ஈடுபடல் வரையறுக்கப்பட்ட காரணத்தினால் மேலதிக நேரம் பிரயாணச் செலவு மற்றும் பயிற்சி செலவு விடய்ஙகளின் ஏற்பாடுகள் எதிர்பார்த்தவாறு நடைபெற்றிருக்கவில்லை. மேலும் 2021 பெறுகைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டு இருந்த மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு அலுவல்களும் அரச செலவுகள் மீளாய்வு சுற்றறிக்கையின் படி வரையறுப்பதற்கு நடவடிக்கை | பாதீடு தயாரிக்கும் போது முடிந்தளவு முரண்கள் குறைவாக இருக்கக் கூடிய விதமாக மேற்கொள்ள வேண்டும். |

எடுத்தேன். அதனால் அச் செலவு விடயங்களின் ஏற்பாடுகள் சேமிப்பு காணப்பட்டது.

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடுகள் காணப்படின் மாத்திரம் திணைக்களம் ஒன்றினால் வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது திட்டம் ஒன்றிற்கான செலவு ஒன்றிற்கு அல்லது கடப்பாடு ஒன்றிற்கு அணுக முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ஏனைய மூலதனச் செலவுகள் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 62,127,413 இற்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்தக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நி.பி. 94(3) பிரகாரம் முன்கூட்டிய கிரய மதிப்பீடு திட்டமுறைமை மூலம் செயற்திட்டம் ஒன்றின் செலவு வருடாந்த மதிப்பீட்டில் முன்கூட்டிய கிரய மதிப்பீடு ஒன்று காணப்பட்ட போது அந்த வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் படி பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் ஏற்படுத்தாமல் அதன் முன்மொழிவு அல்லது செயற்திட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு முடியாது என திணைக்கள தலைவர் அறிந்த சந்தர்ப்பத்தில் நி.பி. 94(1) ஏற்பாடுகளை கவனத்தில் எடுக்காமல் அந்த பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்துவதற்கான அதிகாரம் வழங்குவதற்கு அந்தத் திணைக்களத் தலைவருக்கு முடியும். எனினும் குறிப்பிட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட மொத்த கிரய மதிப்பீட்டை மிகைத்து செலவுகள் செய்தல் மேற்கொள்ளக் கூடாது.<br><br>அதன் படி நீர்சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 – 2023 இடைக்கால பாதீட்டு சட்டகத்தினுள் கிராமிய வயல் நிலங்களை அண்மித்த 5000 குளங்கள் நீர்த்தேக்கங்கள் அபிவிருத்தி செய்வதற்காக 429-2-3-2-2506 செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 11,000 மில்லியன் தொகை வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் | வருட இறுதியில் செலுத்த வேண்டிய அனைத்து மீதிகளையும் சரியாக இனங்கண்டு பொறுப்புக்கள் என கணக்கீடு செய்யப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்காக அதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு அலுவல்கள் மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தி அறிவிக்கும் முறைமைகள் ஊடாக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2021 ஆண்டிற்காக ரூபா 3000 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 செப்தெம்பர் மாதம் அளவில் 1400 குளங்கள் அணைக் கட்டுக்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | அரச நிதிச் சுற்றறிக்கை 255/2017 பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் எண்ணிக்கை அரச கணக்குத் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற தகவல் முறைமை நாளாந்தம் நாளதுவரை ஆக்கப்படுவதற்காக ஒவ்வொரு செலவு அலகுகள் தொடர்பாக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் பொறுப்புக்கள் அந்த பொறுப்புக்களை விடுவித்தல் தொடர்பான தகவல்கள் இணையதளத்தில் தரவேற்றம் (UP LOAD) செய்யப்பட வேண்டுமென அறிவுரை வழங்கப்படடிருந்தது. 2021 ஆண்டிற்குரிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த தரவுகளின் படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ரூபா 1,186,165,809 மற்றும் பொறுப்புக்கள் 893,572,086 ஆகக் காணப்பட்டதுடன், நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இன் படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ரூபா 645,807,163 மற்றும் பொறுப்புக்கள் ரூபா 519,517,145 ஆகக் காணப்பட்டது. அதன் படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ரூபா 540,358,646 மற்றும் பொறுப்புக்கள் ரூபா 374,054,941 இற்கான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | NEW CIGAS தரவேற்றம் செய்யப்பட்ட பொறுப்புக்களில் சிற்சில வழுக்கள் காணப்படுகின்றது என அந்த நிறுவனங்களை வினவிய போது கண்டறியப்பட்டது. நீர் சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளின் கீழ் 2021.12.31 திகதியில் உள்ளளவாறு பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் NEW CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தரவேற்றம் செய்யப்பட்ட தகவல்கள் மீது இறுதிக் கணக்குகள் உட்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையால் வெவ்வேறாக முன்னைய ஆண்டுகளைப் போல் அட்டவணைகள் மூலம் பொறுப்புக்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக பல எண்ணிக்கையான உப அலுவலகங்கள் ஊடாக கணக்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையால் நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் அவ்வவ் நிறுவனங்களினால் தரவேற்றம் செய்யப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை எழுத்துமூலம் உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் போனது. | அரச நிதிச் சுற்றறிக்கை 255/2017 அமைவாக ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் பேணிச் செல்ல வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றது

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 146 | ஏனைய கணக்கீட்டு அலுவலர்களுக்கு தனது செலவுத் தலைப்பின் கீழ் செலவுகள் மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற வேலைகளின் திட்டம், முன்னேற்றம், செலவுகள் மற்றும் சேமிப்பு தொடர்பாக கவனமாக இருக்க வேண்டியதுடன், வேலைத் திட்டத்துக்கு புறம்பாக அல்லாமல் மற்றும் வரையறைகளை மிகைக்காமல் செல்கின்றது என உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2506 செலவு விடய இலக்கத்தின் கீழ் ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக மேற்கூறிய ஏற்பாடுகளின் படி செயற்பட்டிருக்கவில்லை. | 2021 வேலைத் திட்டம் தயாரிக்கும் போது அவ்வவ் திணைக்களங்களின் மூலம் செயற்திட்ட முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவை அமைச்சின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வேலைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டது. அதன் படி 2021 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் படி மாதாந்த முன்னேற்ற அறிக்கை அவ்வவ் திணைக்களங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதன் முன்னேற்றம் தொடர்பாக பொழிப்பு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அதே போல் அந்த வேலைத் திட்டத்தில் அடங்கியிருந்த வேலைகள் தொடர்பாக இரு வாரங்களுக்கு ஒரு முறை பௌதீக முன்னேற்றம் தொடர்பாக முன்னேற்ற அறிக்கையும் அமைச்சின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதத்துக்கு ஒரு முறையும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தக் | நிதிப் பிரமாணம் 146 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அடங்கக் கூடியவாறு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், படிவங்கள் அறிமுகப்படுத்தி அதன்படி தொடர் செயல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கூட்டங்களில் அவ்வவ் திணைக்களத்திற்கு ஏற்பாடுகளின் சேமிப்பு தொடர்பாகவும் வழங்கியிருந்த ஏற்பாடுகளின் படி செலவு வரையறை பேணிச் செல்ல வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதே போல் ஏனைய திணைக்களங்களுக்கு வேலைத் திட்டத்துக்கான ஏற்பாடுகள் விடுவிக்கும் போது அந்த ஏற்பாடுகளில் எல்லைக்குள் செலவுகள் மேற்கொள்வதற்காகவும், எல்லா சந்தர்ப்பங்களிலும் எழுத்துமூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றதுடன் கூட்டங்களுக்கு உரிய கலந்துரையாடல் குறிப்புக்கள் (minutes) மூலம் செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்கள் மற்றும் அறிவுரைகள் அனைத்துத் தரப்பினர்களுக்கும் தாமதம் இன்றி வழங்கப்பட்டதுடன் அந்த குறிப்புகள் இந்த பிரிவில் கோப்பிடப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 – 2023 இடைக்கால பாதீட்டு சட்டகத்தினுள் குளங்கள்/ அணைக்கட்டுகள் மற்றும் சார்ந்த 5000 கால்வாய்கள் தயாரிப்பதற்காக சாட்டப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டத்திற்கு நேரொத்ததாக நீர்ப்பாசன அமைச்சு, நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சு மற்றும் மஹாவலி இராஜாங்க அமைச்சின் கீழ் 5000 குளங்கள்/ | நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படும் அனைத்து நிறுவனங்களினாலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் அடங்கிய நாளதுவரையான அறிக்கை |

| | | |
|---|---|---|
| அதன் கீழ் 2021 ஆண்டில் ரூபா 2,568,196,192 தொகை செலவிடப்பட்டு 25 மாவட்டங்களும் அடங்கக் கூடிய விதமாக 1400 குளங்கள்/ அணைக்கட்டுகள் மாத்திரம் மறுசீரமைக்கப்பட்டிருந்தது. | அணைக்கட்டுகள் அகழிகள் மறுசீரமைப்பதற்கான கருமத்திற்கு நேரடிப் பங்களிப்பு வழங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.<br><br>இடைக்கால பாதீட்டு சட்டகத்தினுள் 2021 ஆண்டிற்காக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சிற்கு ரூபா 3000 மில்லியனுக்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அதற்கு சமாந்தரமாக நீர்ப்பாசன அமைச்சிற்கும் மற்றும் மஹாவலி இராஜாங்க அமைச்சிற்கும் நீர்சௌபாக்கிய நிகழ்சித் திட்டத்தின் கீழ் மேற்கூறிய மறுசீரமைப்பிற்காக வெவ்வேறாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் மூலம் 2021 ஆண்டிற்காக 1000 குளங்கள்/ அணைக்கட்டுகள் கால்வாய்களை மறுசீரமைக்கும் இலக்கினை அடைந்திருந்ததுடன், அந்த இலக்கினை மிகைத்து 1300 குளங்கள்/ அணைக்கட்டுகள் கால்வாய்கள் மறுசீரமைப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | ஒன்று பேணப்பட வேண்டும்.<br><br>அச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூலப் பிரமாணங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.<br>I. குளங்கள்/ அணைக் கட்டுகள் மறுசீரமைப்புக்காக இனங்காணும் நடைமுறை மற்றும் முக்கியத்துவம் வழங்கும் நடைமுறை.<br>II. ஏற்பாட்டு வரையறுக்குள் மேற்கொள்ளக் கூடிய கருமங்களை தீர்மானிக்கும் நடைமுறை.<br>III. குளங்கள்/ அணைக் கட்டுகளை விரிவாக்கல் மற்றும் ஆளமாக்கும் போது அகற்றப்படுகின்ற வண்டல் மண் மற்றும் மண் தொடர்பாக கட்டுப்பாடு மற்றும் அப்புறப்படுத்தல் தொடர்பான மூலப் பிரமாணம்.<br>IV. விவசாய அலுவல்களுக்கு பாதகங்கள் ஏற்படாதவாறு குளங்களை மறுசீரமைப்பதற்கான காலவரையறை தீர்மானிப்பதற்குரிய மூலப் பிரமாணம்.<br>V. சுற்றாடல் சட்ட திட்டங்களுக்கு இணங்குவது தொடர்பான மூலப் பிரமாணங்கள். |

(ஆ) நீர்சௌபாக்கிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் சிறு மற்றும் மத்திய அளவிலான குளங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வண்டல் மண் அகற்றும் முன்னோடி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | குளத்தின் அடிப்பகுதியை சுத்தம் செய்யும் போது அகற்றப்படுகின்ற பண்டங்களை அளவை செய்து கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அரசினால் விதிக்கப்படுகின்ற கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | மண் விசாரணையின் மூலம் பண்டங்களின் அறுதியான இணைவு அளவை செய்தலுக்கான செலவு மிகையாக காணப்படுவதனால் அரசாங்க செலவினை குறைப்பதற்கு முடியாமல் உள்ளது. அதனால் கிராமிய குளங்களில் இருந்து | குளங்களின் அடிப் பகுதியை சுத்தம் செய்யும் போது அகற்றப்படுகின்ற பண்டங்களை அளவை செய்து 2009 மே 06 திகதிய 1600/18 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | அகற்றப்படுகின்ற வண்டல் மண்ணுக்காக வகைப்படுத்தப்பட்டு விலை ஒன்று தீர்மானித்தல் நடைமுறை சாத்தியமாக காணப்படவில்லை. 03 கியூப்களுக்காக ரூபா 1000 முதல் 1750 வரை செலுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணங்கியிருந்ததுடன், முன்னோடி செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் படி நிலைமையை மீளாய்வு செய்து கியூப் ஒன்றின் விலையை தீர்மானிப்பதற்கு இணங்கியிருந்தது. | கட்டணம் அல்லது அதற்கு குறையாத கட்டணம் ஒன்றை தீர்மானித்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | குளங்களின் வண்டல் மண் மற்றும் மண் அகற்றுவதற்கான அபிவிருத்தி தரப்பினருடன் இணங்கியிருந்த உடன்படிக்கையின் படி, அந்த அலுவல்கள் உப ஒப்பந்தவேலை வழங்க முடியும் என்ற நிபந்தனை உள்ளடங்கியிருக்காத போதிலும் உப ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. | இராஜாங்க அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கோவையின் படி வண்டல் மண் அகற்றும் அலுவல்கள் அபிவிருத்தி தொழில் முயற்சிகளினால் சுதந்திரமாக செயற்படுத்தும் என இராஜாங்க அமைச்சு எதிர்பார்க்கின்றது. எதிர்கால வண்டல் மண் அகற்றும் அலுவல்களின் போது முன்னோடி செயற்திட்டத்தின் கற்றுக் கொண்ட பாடத்தின் ஊடாக அபிவிருத்தி தரப்பினர் மற்றும் உப ஒப்பந்தகாரர்கள் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்த வேலையின் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல் இராஜாங்க அமைச்சு எதிர்பார்க்கின்றது. முத்தரப்பு உடன்படிக்கையில் உப ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் உப ஒப்பந்தக்காரர்கள் தவிர்க்க முடியாதுள்ளதுடன் உப ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளல் பொதுவான ஒப்பந்த நடைமுறை ஆகும். தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி தரப்பினரால் உப ஒப்பந்த வேலை மேற்கொள்ளல் தொடர்பாக இராஜாங்க அமைச்சிற்கு எதிர்ப்பொன்று காணப்படாததுடன், | வெளித்தரப்பினருடன் அணுகக் கூடிய உடன்படிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் விடுவிப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேலைகளுக்காக அபிவிருத்தி தரப்பினர்களுடன் மாத்திரம் இராஜாங்க அமைச்சு செயற்பட்டுள்ளது என. | |
| iii. | அபிவிருத்தி தரப்பினர்களினால் தனியார் ஒப்பந்தக்காரர்கள் ஈடுபடுத்தி வண்டல் மண் அகற்றிய 37 குளங்களில் 56,735 கியூப் வண்டல் மண் அகற்றப்பட்டிருந்ததென அறிவித்திருந்தது. அகற்றப்பட்டு இருந்த வண்டல் மண்ணிற்காக ரூபா 560 குறைந்த கட்டணம் தீர்மானிப்பதற்கு இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்காமையால் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 24,057,493 தொகை அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலைகூறல் தார்களினால் கியூப் ஒன்றிற்காக ரூபா 333.30 முதல் ரூபா 650.00 வரை பல்வேறு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அரசாங்கம் எதிர்பார்த்த மொத்த வருமானம் ரூபா 20,620,028.20 ஆகும். முத்தரப்பு உடன்படிக்கையின் படி கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு குறிப்பிட்ட தொகையை செலுத்துதல் குறிப்பிட்ட அபிவிருத்தி தரப்பினரின் பொறுப்பாக இருந்ததுடன், அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக கமநல அபிவிருத்தி திணைக்களம் பொறுப்பாக இருக்க வேண்டும். | ஆண்டின் போது அகற்றப்படுகின்ற வண்டல் மண்ணிற்காக முழுமையாக கிடைக்க வேண்டிய தொகையினை கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் அதன் மூலம் கிடைக்கக் கூடிய வருமானம் அரச வருமானத்துக்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| iv. | அபிவிருத்தி தரப்பினரினால் தனியார் துறை ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொண்டிருந்ததுடன், மேற் குறிப்பிட்ட உடன்படிக்கைகளுக்காக இராஜாங்க அமைச்சின் அல்லது குளத்திற்கு பொறுப்பான நிறுவனத்தின் இணக்கம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகள் மூலம் முறைசாரா அகழ்வுகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன், குளங்களின் உளமை மற்றும் பாதுகாப்புக்கு சவாலாக காணப்பட்டது. | இராஜாங்க அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கோவையின் படி வண்டல் மண் அகற்றும் அலுவல்கள் அபிவிருத்தி தொழில் முயற்சியாளர்களினால் சுதந்திரமாக செயற்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சு எதிர்பாக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் அபிவிருத்தி தொழில் முயற்சியாளர்களினால் உப ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளல் தொடர்பாக இராஜாங்க அமைச்சின் எதிர்ப்பு காணப்படவில்லை. | குளங்களின் உளமை மற்றும் பாதுகாப்புக்கு சவாலாகக் கூடிய விதமாக அகழ்வு விடயங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ள உப ஒப்பந்தவேலைகாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| v. | தனியார் ஒப்பந்தக்காரர்களினால் அகற்றப்பட்ட கணிய பண்டங்களுக்காக மேலே குறிப்பிட்டவாறு முறைசாரா விதமாக அணுகியிருந்த உடன்படிக்கையின் படி ரூபா 13,573,634 தொகை தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு (NEMO), அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலை | உப ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மீதியான கொடுப்பனவுகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் படியும் மீதித் தொகை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு தீர்க்க வேண்டுமென அபிவிருத்தி தரப்பினருக்கு அறிவித்திருந்தமை இராஜாங்க | தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு (NEMO), அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலை கூட்டுத்தாபனம் (SD&CC) மற்றும் மத்திய பொறியியல் பணியகம் (CESL) ஆகிய |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் (SD&CC) மற்றும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் (CESL) ஆகிய நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அந்தத் தொகைகளை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | அமைச்சு காலத்திற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருந்தது. | நிறுவனங்களிலனால் தனியார் ஒப்பந்தக்காரர்களினால் அகற்றப்பட்டிருந்த கணியப் பண்டங்களுக்காக பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| vi. | களப் பரிசோனை மேற்கொள்ளப்பட்ட எரே குளம் மற்றும் லபுனொறுவ குளத்தின் போசாக்கு கால்வாய் பாதையின் இரு மருங்கிலும் மணல் வைப்புச் செய்யப்பட்டிருந்த இடங்கள் அகழ்வு செய்யப்பட்டிருந்தது. மணல் படிவுகள் மேற்பட்ட பின்னர் தொழிநுட்ப பரிந்துரை எதையும் கவனத்தில் எடுக்காமல் மணல் குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதனை கட்டுப்படுத்துவதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்ததுடன், நீர்ப்பாசன உத்தியோகத்தரின் அறிவுரை மற்றும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கவனம் செலுத்தாமல் ஒப்பந்தக்காரர்கள் செயற்பட்டிருந்தனர். | முன்னோடி செயற்திட்டத்துக்கு இடையில் கிராமிய குளங்களில் வண்டல் மண் அகற்றும் செயற்பாடுகளுக்காக இராஜாங்க அமைச்சினால் விஷேடமான தொழிநுட்ப வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் குளங்களில் வண்டல் மண் அகற்றும் செயற்பாடுகள் குறிப்பிட்ட அபிவிருத்தித் தரப்பினரினால் நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொழிநுட்ப பரிந்துரைகளுக்கு இணங்க குளங்களின் வண்டல் மண் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| vii. | உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறி குளங்கள் அகழ்தல் மேற்கொண்டு மணல் வடிகட்டல் மாத்திரம் மேற்கொண்டு ஏனைய பண்டங்களை மீண்டும் குளத்திலேயே வைப்புச் செய்யும் முறையில் ஒப்பந்தக்காரர்களினால் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி குளங்களை விரிவாக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன்படி மணல் படிவு மாத்திரம் அகற்றப்படுவதனால் குளத்தின் நீர் தங்கியிருப்பது தொடர்பாக பிரதிகூலமான தாக்கம் ஏற்படுவதன் மூலம் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விரைவான வண்டல் மண் அகற்றும் செய்கை மூலம் ஆக்கபூர்வமான மற்றும் மறை தாக்கங்கள் இணங்காண்பதற்காக முக்கியமாக முன்னோடி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. முன்னோடிச் செயற்திட்டத்தை மீளாய்வு செய்து நீர்ப்பாசன திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் அபிவிருத்தி தரப்பினருடன் கலந்துரையாடல் பல நடாத்திய பின்னர் வழிகாட்டல் கோவை மற்றும் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க குளத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வண்டல் மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| viii. | வண்டல் மண்ணை அகற்றுதல் உச்சமட்ட அளவு 2 அடிகளை மிகைக்க் கூடாது எனினும் லபுனோருவ குளத்தின் 04 அடிகள் ஆளத்திற்கு வண்டல் மண் மற்றும் மண் வெட்டப்பட்டு அகற்றப்பட்டிருந்தது. லபுனோருவ குளத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த வண்டல் மண்ணின் மூலம் மணல் வடிகட்டிய பின்னர் அகற்றப்பட்ட வண்டல் மண் குளத் தரைப்பகுதி சேரக் கூடிய விதமாக மண் வடிகட்டலுக்காக நீர் பெற்றுக் கொள்வதற்கு மணல் வடிகட்டுவதற்குரிய இடத்தில் இருந்து குளத் தரைப் பகுதி வரை வடிகால் வெட்டப்பட்டிருந்தமையால், குளத் தரைப்பகுதி முறைசாரா விதமாக ஆக்கப்பட்டிருந்தமையால் விவசாய அலுவல்களுக்காக நீர் பெற்றுக் கொள்ளல் போலவே ஏனைய தேவைகளுக்கும் குளத்தினை பயன்படுத்துவதில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | இராஜாங்க அமைச்சு நம்பிக்கை வைத்துள்ள நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வை மீது அரச தொழில் முயற்சிகளான குறிப்பிட்ட அபிவிருத்தி தரப்பினர் தரம் சார் கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. இணங்காணப்பட்ட மறைசார் தாக்கம் குறிப்பிட்ட அபிவிருத்தி தரப்பினரினால் நீர்ப்பாசன திணைக்களத்தின் தொழிநுட்ப பங்கு கொள்ளல் ஊடாக எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | வண்டல் மண் அகற்றிய பின்னர் குளத்தினை தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடியவாறு தயாரிக்க வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 70 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 37 ஆக இருந்தது. அதன் படி வெற்றிட எண்ணிக்கை 33 ஆகும். சிரேஷ்ட மட்டத்தில் 09 பதவிகளும் மூன்றாம் மட்டத்தில் 03 பதவிகளும் , இரண்டாம் மட்டத்தில் 12 பதவிகளும் ஆரம்ப மட்டத்தில் 09 பதவிகள் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்ப்பு தொடர்பாக பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அடிக்கடி கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்தியவசியமான பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஏனைய பதவிகளை பிற்போட வேண்டும். |